696 No. M. 1123.

பாலியர் மித்திரன்

The Children's Friend

MAY, 1932

...ERATURE SOCIETY FOR INDIA
...HABAD RANGOON COLOMBO

சென்னை கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார்

புதிதாய் அச்சிட்ட புத்தகங்கள்

முதற் புத்தகம்	By S. G. Daniel, B.A.	விலை,	2½	அணா
இரண்டாம் புத்தகம்	do.	,,	3	,,
மூன்றாம் புத்தகம்	do.	,,	4	,,
நான்காம் புத்தகம்	do.	,,	4½	,,
ஐந்தாம் புத்தகம்	do.	,,	5	,,
பாலர் பாட அனுபந்தம்	do.	,,	3	,,

வித்தியா மாலிகை

பால பாடம்	விலை,	1½	அணா
முதற் புத்தகம்	,,	3	,,
இரண்டாம் புத்தகம்	,,	4	,,
மூன்றாம் புத்தகம்	,,	4½	,,
நான்காம் புத்தகம்	,,	5	,,
ஐந்தாம் புத்தகம்	,,	7	,,

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள்

முதற் பாடம்	விலை,	1½	அணா
முதலாம் வாசக புத்தகம்	,,	3	,,
இரண்டாம் வாசக புத்தகம்	,,	4	,,
மூன்றாம் வாசக புத்தகம்	,,	4	,,
நான்காம் வாசக புத்தகம்	,,	4½	,,
ஐந்தாம் வாசக புத்தகம்	,,	5	,,
ஆறாம் வாசக புத்தகம்	,,	5	,,

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

Post Box 501, Park Town, Madras

3138
8774·8/13

No. 5. மே 1932

பாலியர் மித்திரன்

அடைக்கலப் பட்டணங்கள்

(தொடர்ச்சி)

இந்த அடைக்கலப் பட்டணங்கள் பாவியையும் இனிவரும் சுவிசேஷ இரட்சிப்பையும் காட்டின பழைய ஏற்பாட்டின் படங்களில் ஒன்று. தேவன் இவ்விதமாய் யூத சாதியாருக்குப் பெரிய சுவிசேஷ சத்தியங்களைப் போதித்து வந்தார். சிறுவருக்குச் சித்திரப் படங்களுள்ள கதைப் புத்தகம் அதிகப் பிரியமாயிருப்பதுபோல, தேவன் இளம்பருவத்திலிருந்த ஆதிச்சபைக்கு இப்படிப்பட்ட படங்களினாலும், அடையாளங்களினாலும் போதித்துவந்தார்; அவைகளில் இந்த அடைக்கலப் பட்டணங்களின் படம் ஒன்று. தேவ பிரமாணத்தை மீறி, பழிவாங்குகிறவனால் தொடரப்படுகிற பாவியின் படத்தை அது அப்போது காட்டினதுபோலவே, இப்போதும் காட்டுகிறது; நீதியானது உருவின பட்டயத்தோடு பாவியைத் தொடர்ந்து, 'பாவஞ்செய்கிற ஆத்துமா சாகவேண்டும்' என்றும் (எசே. 18 : 4), 'கையோடே கைகோத்தாலும், துஷ்டன் தண்டனைக்குத் தப்பக்கூடாது' என்றும் (நீதி. 11 : 21) சத்தமிடுகிறது.

மேலும் இந்தப் பட்டணம் வலியாரென்றும் எளியாரென்றும், பெற்றுரென்றும் பிள்ளைகளென்றும், எசமானென்றும் வேலையாளென்றும் வித்தியாசம் பாராமல், எல்லாருக்கும் அடுத்த படமாய் இருக்கிறது; 'ஏனெனில் எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாய் இருக்கிறார்கள்' (ரோம. 3: 23). ஆனால் ஓடிவரும் பாவிக்கு ஒரு மகிமையான நகரம் தன்னுடைய கதவுகளைத் திறக்கிறது; 'ரட்சிப்பே அதின் மதிலும் அரணுமாக' இருக்கிறது. பாவி 'சமபூமியில் எங்கும் நின்று அழியாதபடிக்கு, அவன் ஜீவன் தப்ப அங்கே ஓடிப்போகும்படி' (ஆதி. 19: 17) ஏவப்படுகிறான். பாவியின் அடைக்கலமும், பாவியின் நேசருமாகிய இயேசுவே அந்த நகரம். அதின் மதில்களுக்குள் பாவி ஒருவிசை புகுந்தபின், எந்தச் சத்துருவும் அவனைத் தொட முடியாது; எந்தப் பட்டயமும் அவனைப் பயமுறுத்தவும் முடியாது. அப்போது அவன், 'கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்' என்று (ரோம. 8: 36) ஆர்ப்பரிப்போடு சொல்லுவான்.

பிரியமான சிநேகிதரே, இந்த அடைக்கலப் பட்டணம் உங்களில் சிறுவரிலும் சிறுவருக்குங்கூட திறந்திருக்கிறதென்பது எனக்குத் தெரியுமாகையால், இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். பதினெட்டு நூறு வருஷங்களுக்குமுன் சிறுவரின் கூட்

டம் ஒன்று அதின் கதவண்டையில் நின்று, உள்ளே போக விரும்பினதைக் குறித்து நான் பிரியத்தோடு வாசித்திருக்கிறேன்; அப்போது மற்றவர்கள் அவர்களை அன்பற்ற விதமாய் அப்புறப்படுத்தியும், கதவுகளைத் தமது காத்தில் வைத்திருப்பவரும், 'ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவருமானவர்' (வெளி. 3: 7), 'சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது' என்றார் (மத். 19: 14). உங்களைப்போன்ற சிறுவரில் அநேகர் இரட்சகருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, ஏற்கனவே இந்தப் பாக்கியமான நகரத்துக்குள் பிரவேசித்திருக்கிறார்களென்று நான் அறிந்து விசுவாசிப்பதால், நான் அதைக்குறித்துப் பேசும் போது, நீங்களும் வந்து கேட்க வேண்டுமென்று விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்களில் அநேகர் தாங்கள் பாவிகள் என்று உணர்ந்து, ஒரு இரட்சகர் தங்களுக்குத் தேவை என்பதைக் கற்றிருக்கிறார்கள் என்றும் நான் அறிந்து விசுவாசிக்கிறேன். அவர்கள் தேவனுடைய பரிசுத்த பிரமாணத்தை மீறி, நித்திய மரணத்துக்கு அருகரானவர்கள் என்பதைத் தேவனுடைய சொந்த வசனத்தின் மூலமாயும் ஆவியின் மூலமாயும் கற்றுமிருக்கிறார்கள். இப்போதோ அவர்கள் சுவிசேஷ அடைக்கலத்தின்

கீழ் சுகமாய் இருக்கிறார்கள். பகைஞன் அடங்கிப் போனான். பழிவாங்குகிறவன் தன் பட்டயத்தை உறைக்குள்ளே போட்டுவிட்டான். அந்த நகரத்தின் தெருக்கள் வழியாய் அவர்கள் போகையில், 'பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்' என்றும் (சங். 8: 2), 'கர்த்தர் அரணான நகரத்தில் எங்களுக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம்' என்றும் (சங். 31: 21), சிறு குரலாய்ப் பாடுவதை நான் கேட்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது.

(தொடரும்)

நஞ்சுண்டவன் கதை

ஒரு ஊரில் ஒரு மனுஷன் இருந்தான், அவனுக்கு ஜயசிங்கன் என்று பெயர்; அவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனா யிருந்தபோதிலும், மகா ஏழையாயிருந்தான். அவன் தெருவில் நின்று கொண்டிருந்தபோது, அவன் பாலிய சிநேகிதரில் ஒருவன் அவ்வழியாய்ப் போனான். அவன் அதிக ஜோடனையுள்ள ஒரு அரபிக்குதிரையின்மேல் ஏறிக் கொண்டு போனான்; இரண்டு வேலைக்காரர்கள் அவனுக்குப் பின்னாகப் போனார்கள். ஜயசிங்கன்

அதைப் பார்க்கவே, பொறுமையும் பொருளாசையும் உடையவனானன்.

உடனே அவன் தனக்குள் சொல்லுகிறான்: இந்தப் பயல் இவ்வளவு வாழ்விலும், நான் இவ்வளவு தாழ்விலும் இருப்பானேன்? இவன் தேனை யருந்துகிறது போலும், நான் கசப்பைக் குடிக்கிறதுபோலும் இருக்கிறதே. இவனுக்கு இருக்கிற குதிரையும் பணப்பைகளும் எனக்கு இருக்குமாகில், எவ்வளவு நன்மையாயிருக்கும்? 'அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான்' என்பது போல், இந்த அற்பனுக்குப் பவிஷு வந்திருப்பதினாலேயல்லவா இவ்வளவு ஜம்பமாய்ப் போகிறான் என்றான்.

அச்சமயத்தில் ஜயசிங்கனுக்குச் சமீபமாக விருத்தாப்பியமுள்ள ஒரு பிரசங்கி நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு ஞானவரம் என்று பெயர்; அவன் ஜயசிங்கனுக்குச் சிநேகிதனும் போதகனுமாயிருந்தவன். ஜயசிங்கன் பேசின வார்த்தைகளைக் கேட்டுச் சொல்லுகிறான்: என் மகனே! பிறர் பொருளை இச்சியாதே; 'பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக' (யாத்.

20: 17) என்று சத்திய வேதம் சாக்ஷியிடுகிறதே என்றான்.

அதற்கு ஜயசிங்கன் சொல்லுகிறான்: ஒரு மனுஷனுடைய செய்கை சரியாயிருக்குமாகில், அவனுக்குள் உண்டாகும் நினைவுகளை ஒருபொருட்டாக எண்ணவேண்டியதில்லை. களவு செய்யவாவது, கொலை செய்யவாவது என்னுடைய கைகளை நீட்டவே மாட்டேன் என்றான்.

அப்போது அந்த விருத்தாப்பியன்: வித்திலிருந்து முளையும், முட்டையிலிருந்து குஞ்சும் உண்டாவதுபோல், மனுஷனுடைய எண்ணத்திலிருந்தே செய்கையு முண்டாகிறது. மனுஷர்கள் செய்கையைப் பார்க்கிறார்கள்; தேவனோ செய்கையை மாத்திரமல்ல, இருதயத்தின் எண்ணத்தையும் பார்க்கிறார். அவரது திருப்பார்வையில் பகையானது கொலைபாதகமாகவும், இச்சையானது களவாகவும் இருக்கின்றன. 'பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது' என்று வேதம் சொல்லுகிறது (1 தீமோ. 6: 10); வேரைத் தோண்டி யெடுத்தால் அதில் நச்சுக்கனி காணப்படமாட்டாது; ஆயினும் அதை வளரவிட்டால் அதில் அவ்விதக் கனி யுண்டாகும். அவ்வாறே மனுஷன் உள்ளத்திலுண்டாகும் தீய எண்ணத்திலிருந்து கடைசியில் தீயசெய்கைகள்தான் தோன்றும் என்றான்.

ஜயசிங்கன் இதைக்கேட்டு இவ்வளவு பரிசுத்தமா யிருக்கப்பட்ட வேதத்தின்படி யார் நடக்கப்போ கிறார்கள்? சமஸ்த மனுஷரும் இதனால் கடவுளுக்கு முன்பாகக் குற்றவாளிகளாக வேண்டுமே என்று நினைத்து, தீவினையை என் கண்ணால் பார்க்காவிட் டால், அது தீவினை யல்லவென்று பதஷ்டமாய்ச் சொன்னான்.

அதற்கு விருத்தாப்பியனாகிய ஞானவரம் பிர சங்கி சொல்லுகிறான்: நான் இப்போது உனக்கு என் ஜீவியகாலத்தில் நேரிட்ட ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன்: எனக்கு நரையுண்டாகாததற்கு முன்பு நான் பாலியனாயிருந்த காலத்தில், நம் முடைய தேசத்தைச் சேர்ந்த ஒரு மலைமேலே பிர யாணஞ்செய்தேன். ஒரு செங்குத்தான மலை மேல் ஏறும்போது என் குதிரையின் கால் தடுமாறி நான் தலைகீழாக ஒரு பாதாளத்தில் விழப் போனேன்; அப்போது ஒரு புதரில் என் சட்டை மாட்டிக்கொண்டதால் நான் காயப்பட்டாலும் அந்தப் பெரிய ஆபத்துக்குத் தப்பி மறுபடியும் குதிரையில் ஏறிக்கொண்டு கொஞ்சதூரம் போ னேன்; போகையில் ஒரு சிறுத்தைப் புலியானது வழியிலிருந்த ஒரு புதரிலிருந்து திடீரெனச் சீறிக் கொண்டு என்மேல் பாய்ந்தது; அப்போது நான் பலசாலியாயிருந்ததால், என் அரையில் மாட்டி யிருந்த கூருள்ள கத்தியினால் அதைக் குத்திக்

கொன்றுவிட்டேன்; அதன் நகங்களாலுண்டான காயும் எனக்கு இன்னமிருக்கிறது; அந்தக் காயத்தால் நான் அதிகமாய்ப் பெலவீனப்பட்டுச் சோர்வடைந்துபோனதால், சமீபத்திலிருந்த ஒரு வீட்டிற்குப் போனேன். அது என் ஜன்மப் பகையாளியினுடைய வீடு. அவன் என்னைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தாபரிக்க இடமும் புசிக்க போஜனமுங் கொடுத்தான். அவன் ஒரு பாத்திரத்திற் கொடுத்த திராக்ஷரசத்தை நான் ஆவலாய் வாங்கிக் குடித்தேன்; அதில் நஞ்சு கலந்திருந்தது எனக்குக் கிஞ்சித்தும் தெரியாமலிருந்தது. ஓ ஜயசிங்கனே! நான் கண்ணால் பார்த்த அபாயங்களைப்பார்க்கிலும், என் கண்ணால் பார்க்கக்கூடாத அபாயம் பெரிதாயிருந்தது. செங்குத்தான மலையிலிருந்து தடுமாறி விழுந்ததும், சிறுத்தையின் வாயிலிருந்து தப்பினதும் பெரிதல்ல; என் கண்ணுக்குத் தெரியாமல் என் தேகத்தில் சென்ற விஷத்தினால்தான் எனக்கு அதிகத் துன்பம் நேரிட்டது என்றான்.

அப்போது ஜயசிங்கன்: நீர் நஞ்சுண்டது நிஜமாகில் அப்போதே மரித்திருப்பீரே; நீர் இந்நாள் வரைக்கும் ஜீவனோடிருப்பது எப்படி யென்றான்.

அதற்குப் பிரசங்கி சொல்லுகிறான்: நான் என் பகைஞன் வீட்டைவிட்டுப் புறப்பட்டபின்பு நான் நாடிப்போன இடத்தில் சேர்ந்தேன், அப்போது

எனக்கிருந்த வியாதியும் துன்பமும் இவ்வளவு அவ்வளவல்ல; அந்த இடத்தில் ஒரு தேறின வைத்தியர் இருந்தார். அவர் அந்த விஷம் முறியத்தக்க ஒளஷதப்பிரயோகஞ்செய்தார். அதனாலே பலனுள் உபத்திரவப்பட்ட எனக்குக் கடைசியில் சுகமுண்டாயிற்று. அந்த நல்ல வைத்தியர் இந்த விஷத்துக்கு மருந்து கொடுத்ததுமன்றி, பாவமாகிய ஆலகால விஷத்துக்கும் தகுந்த ஒளஷதத்தைப் பிரயோகஞ் செய்தார். மனுஷர் காணத்தக்க கொலை களவு முதலிய பெரும்பாவமென்றாலும் சரி, இருதயத்தில் மறைந்திருக்கும் பொருளாசை முதலிய ரகசிய பாவமானாலும் சரி, பாவம் யாவற்றும் கொடிய விஷந்தான். அது நீங்குவதற்கு அவர் ஏற்ற மருந்தைக்குறித்து எனக்கு விபரமாய்ச் சொன்னார் என்றான்.

அப்போது ஜயசிங்கன் அவர் உமக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கித்தாரோவென்று கேட்டான்.

அதற்கு ஞானவரம் பிரசங்கி சொல்லுகிறான்: அவர் எனக்குப் பாவம் தீரும் வழியைக்குறித்து ஞானோபதேசஞ்செய்தார்; பாவம் தொலையவேண்டுமாகில் கிறிஸ்து ரக்ஷகர் சிந்தின திரு உதிரமே தகுந்த பரிகாரம், 'அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களேயும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்' (1 யோவா. 1: 7).

ஒருநாள் அவனுக்கெதிரில் ஒரு வயது சென்ற கிழவன் சாட்சியாக கொண்டுவரப் பட்டான்.

வந்த சாட்சியை வக்கீல் பார்த்து: ஓய், பெரியவரே, உமக்கு வயது என்ன இருக்கும் என்றான். கிழவன்: எனக்கு வயது தொண்ணூறு என்றான்.

வக்கீல்: தொண்ணூறு வயது கிழவனாகிய உமக்கு பத்து வருஷத்துக்குமுன் நடந்த விஷயம் ஞாபகமிருக்குமா என்றான்.

அதற்கு அந்த கிழவன்: பத்து வருஷத்துக்குமுன் மாத்திரமல்ல, பதினைந்து, இருபது வருஷங்களுக்குமுன் நடந்தவைகளும் எனக்கு ஞாபகத்திலுண்டு என்றான்.

இதைக் கேட்டதும் வக்கீல்: பதினைந்து வருஷத்துக்குமுன் நடந்த ஒரு காரியத்தைச் சொல்லும், பார்ப்போம் என்றான்.

கிழவன்: நல்லது, ஐயா, அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, பதினைந்து வருஷத்துக்குமுன் நீர் சட்டப்பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தது மெய்தானா என்றான். வக்கீல்: ஆம் என்றான். அப்போது உமக்கு

அப்ளிக்கேஷன் பணம் கட்டுவதற்காக உமது தகப்பனர் ஒருநாள் இரவு ஒன்பது மணிக்கு என்னிடம் வந்து, முப்பது ரூபாய் எப்படியாகிலும் கொடுக்கவேண்டுமென்று வெகுவாய் மன்றுடினர். நான் அவர் வேண்டுகோளுக்கு இரங்கி, முப்பது ரூபாய் தடையின்றி கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டுபோய் உமது அப்ளிக்கேஷனை அனுப்பினர். நீரும் அந்தப் பரீட்சையில் தேறி, இப்போது வக்கீல் வேலை பார்த்து வருகிறீர். ஆனல் நான் கொடுத்த முப்பது ரூபாய் கடனில் ஒரு பைசா கூட இன்னும் செலுத்தப்படாமலிருப்பது எனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது. உமக்கு சந்தேகமாயிருந்தால், நீரும் கோர்ட்டாரும் அறிய உமது தகப்பனர் கொடுத்த கடன் சீட்டைக் கொண்டு வருகிறேன் என்றன்.

இதைக் கேட்டதும் வக்கீல் வெட்கத்தினுல் தலைகுனிந்து, ஒன்றும் பேசாமல் கிழவனை அனுப்பிவிட்டான். கோர்ட்டிலுள்ள யாவரும் உடல் குலுங்க கைகொட்டி நகைத்தார்கள்.

மிருகங்கள் வாலை உபயோகிக்கும் விதம்

காடுகளில் வசிக்கும் மிருகங்கள் தங்கள் வால்களைப் பலவிதங்களில் உபயோகித்துவருகின்றன. சிற்சில சந்தர்ப்பங்களில் சில மிருகங்கள் தங்கள் வால்களைக் கால்களாகவோ, கைகளாகவோ உபயோகித்துவரப் பார்த்திருக்கலாம். வேறு சில மிருகங்கள் தங்கள் வால்களை ஆயுதங்களாக உபயோகிக்கின்றன. கட்டுவிரியன்போன்ற சில பாம்புகள் தங்கள் வால்களைக்கொண்டு ஒருவித சங்கீதத் தொனி உண்டுபண்ணுகின்றன.

குரங்குகள்

குரங்குகள் பொதுவாகத் தங்கள் வால்களை மூன்ருவது கையாக உபயோகிக்கப் பார்த்திருக்கலாம். வாலைக்கொண்டு ஒரு மரத்தை நன்கு சுற்றிக்கொண்டு ஆடி மற்ருெரு மரத்தைக் கைகளால் தாவிப் பிடிக்கின்றன. வேறு சில சமயங்களில் கைக்கு எட்டாத பழங்களை நீண்ட தங்கள் வால்களைக்கொண்டு பறித்துக்கொள்ளுவது சகஜம்.

மரங்கொத்தி

மரங்கொத்திப் பறவைகள் தங்கள் வாலை மரம் ஏறுவதற்கு உபயோகிக்கின்றன. மரங்களிலுள்ள பூச்சிபுழுக்களையே அவைகள் பெரும்பாலும் தின்று

ஜீவித்து வருவதால், அவைகள் அடிக்கடி மரங்களில் ஏற வால்கள் பெரிதும் உபயோகமாயிருக்கிறது. இப்பறவைகள் மரத்திலும், மரக்கிளைகளிலும் அதிக வேகமாய் ஏறிச்செல்லக்கூடும். சில சமயங்களில் இப்பறவைகள் மரத்தின் ஒரு பக்கத்தில் நிற்கவேண்டுமேயானால், தங்கள் வாலை நன்றாக விரித்து மரத்தைப் பலமாக பற்றிக்கொள்கின்றன. அப்பறவைகளின் வாலுக்கு அவற்றைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி ஏற்பட்டிருக்கிறது. இப்பறவைகள் மரங்களில் ஏறுவதுபோல், அதே வேகத்தில் மரங்களில் பின்பக்கமாக வெகு வேகமாய் இறங்கி வரவும் முடியும். இவைகள் மரங்களைத் துளைத்து கூடு செய்துகொள்ள வேண்டியிருப்பதால், மரங்களை நன்றாகப் பற்றிக்கொள்ளுவதற்கு வால் அதிகப் பயன்படுகிறது.

நீர்க்குதிரை

சமுத்திரங்களில் குதிரை முகம்போன்ற 'நீர்க்குதிரை' என்னும் ஒருவகை மீன்களிருக்கின்றன. இவைகள் ஜலத்தின்மீது நிற்கவேண்டுமேயானால், ஏதேனும் சிறு குச்சிகளைத் தேடிச்சென்று அவைகளில் வாலைச் சுற்றிக்கொண்டு தண்ணீரில் மிதந்து திரியும். மேற்கூறிய சிறு குச்சிகள் இவற்றிற்கு ஒருவித நங்கூரம்போலிருக்கின்றன.

கங்காரு

கங்காரு என்னும் மிருகங்களின் வால் அதிக நீளமாயும், அதிகப் பலமுள்ளதாயுமிருக்கும். அவைகள் வால் பலமாயில்லா திருந்திருக்குமேயானல், கங்காருகளுக்கு தங்கள் பின்னங்கால்களில் நிற்க முடியாது போகுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகவே அம்மிருகங்கள் தங்கள் வாலை ஒரு கால் போல் உபயோகித்துவருகின்றன.

அறுக்கும் ஆயுதம்

ஆஸ்திரேலியாவில் கங்காரு இனத்தைச்சார்ந்த 'கங்காரு எலி' என்னும் ஒருவகை சிறு கங்காருகளிருக்கின்றன. இம்மிருகங்களும் தங்கள் வாலை ஒரு காலாக உபயோகித்துவருகின்றன. இதுமட்டுமின்றி அவைகள் தங்கள் வாலை ஒருவித ஆயுதமாக உபயோகிப்பதுதான் அதிக விசித்திரமானது. அம்மிருகங்கள் தானியக்கதிர்களை ஒன்றுசேர்த்து ஒரு கத்தியால் வெட்டுவதுபோல வெட்டி தங்கள் கூடுகளுக்குக் கொண்டுசெல்கின்றன.

மர அணில்

காடுகளில் வசிக்கும் மர அணில்கள் தங்கள் வாலை ஒரு கம்பளிப்போல் உபயோகிக்கின்றன. அவை அடர்ந்திருப்பதால் குளிர்காலத்திலும், மழை நேரத்திலும் வாலைக்கொண்டு நன்ருக மூடிக் கொள்ளும்.

சிறுத்தைப்புலி

ஐரோப்பா பக்கமுள்ள 'பனி சிறுத்தை'ப் புலி களின் வால்களும் நன்ருக மயிரடர்ந்திருக்கும். அங்குள்ள நரிகள், பூனைகள் முதலியனவும் அடர்ந்த தங்கள் வால்களைக் கம்பளம்போல உபயோ கித்துவருகின்றன. பசுக்கள் தங்கள் வாலை ஈக்கள் ஓட்டும் கருவியாக உபயோகித்துவருகின்றன.

பறக்கும் அணில்

பறக்கும் அணில் உண்மையில் பறப்பது கிடை யாதாம். அவைகள் தங்கள் வாலின் உதவியால் நெடுந்தூரம் பாய்வதையே பறப்பதாக நாம் நினைத் துக்கொள்ளுகிரும். மரங்களில் திரியும் ஓணான் கள் ஒரேயிடத்தில் அதிக நேரம் நிற்கவேண்டி யிருந்தால் தங்கள் வாலைக்கொண்டு ஒரு கொம் பைச் சுற்றிக்கொள்வது இயல்பு. அவ்வாறு சுற் றிக்கொண்டால் ஓணான்கள் எவ்வளவு நேரமும் அசையாமல் நிற்கமுடியுமாம்.

சென்னை-600 008.

DIOCESAN PRESS, MADRAS 1932.—B 4994.

VILLAGE SERIES

TAMIL

	A	P
No. 1. Jesus Opens the Eyes of the Blind Beggar. இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது. (பக்கம் 8)	0	1
No. 2. 'Who are Blessed ?' பாக்கியவான்கள் யார்? (பக்கம் 6) .... }	0	1
No. 3. The Bravery of Sogoro. சோகோ ரோவின் தைரியம். (பக்கம் 6) .... }		
No. 4. What Do You Buy in the Drink Shop? சாராயக்கடையில் எதை வாங்கலாம்? (பக்கம் 16)	0	1
No. 5. Some Ancient Good Sayings. பழைய காலத்து நல்மொழிகள். (பக்கம் 16)	0	1
No. 6. The Excellent Offerings of Three Poor Women. மூன்று ஏழை ஸ்திரீகள் கொடுத்த உத்தம காணிக்கை. (பக்கம் 16)	0	1
No. 7. Father Damien the Lepers' Friend. தாமியன் சுவாமியார் குஷ்டரோகிகளின் நேசன். (பக்கம் 16)	0	1
No. 8. The Teaching of Jesus about The Growing Grain. வளரும் பயிர்—இதைப் பற்றிய இயேசுவின் போதனை. (பக்கம் 20) ..	0	2
No. 9. The Story of Christopher. கிறீஸ்தோபேரின் சரித்திரம். (பக்கம் 16)	0	1
No. 10. Sore Eyes. கண்ணோய். (பக்கம் 12).	0	1
No. 11. The Mosquito—our Enemy. கொசு என்னும் நமது சத்துரு. (பக்கம் 20)..	0	2

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras

பாலியர் மித்திரன்

THE CHILDREN'S FRIEND

(Formerly called The Mission School Magazine)

THE **Paliar Mittiran** is a bright Magazine for children containing stories, anecdotes nature studies and object-lessons and pages in large type for those in the lowest classes edited by Rev. V. Vedanayagam, Madras. The subscription (exclusive of postage) is *one anna* for one copy a month for twelve months.

பாலியர் மித்திரன். சிறுவர்க்கேற்ற இப்பத்திரிகையில் சரித்திரங்களும், விநோதமான பொருட்பாடங்களும், படிக்க ஆரம்பிக்கிறவர்களுக்குப் பெரிய அட்சரங்களில் சில கதைகளும் அடங்கியிருக்கிறதினாலே பிள்ளைகள் இதை ஆவலாய் வாசிப்பார்கள். இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 1.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற்கூலி மிகவும் குறையும்.

மாதர் போதினி

THE MAGAZINE FOR THE HOME

THE **Mathar Bodhini** provides pure and attractive reading for the family circle. Teachers in Girls' Schools, Bible-women and Zenana workers will find it specially helpful.

மாதர் போதினி என்னும் பத்திரிகையில் பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும், சுகவழியைப்பற்றிய போதனைகளும், மதுபானத்திற்கு விரோதமான எச்சரிக்கைகளும், பல கதைகளும், உபமானங்களும் அடங்கியிருப்பதினால் குடும்பத்தில் யாவரும் இதை விருப்பத்தோடு வாசிப்பார்கள். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கும் வேதாகம ஸ்திரீகளுக்கும் உபாத்திச்சிமார்களுக்கும் இது விசேஷமாய் உபயோகமுள்ளது. இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 6.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற்கூலி மிகவும் குறையும்.

கடிதங்கள், கையொப்பப்பணம் அனுப்புவோர் அவைகளை அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

CHRISTIAN LITERATURE SOCIETY, POST BOX 501, MADRAS